செ.வெ.எண்.29

உ3/10444/2017

நாள்.13.05.2017

## பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்டாப் செலக்சன் கமிஷன் தேர்வாணையத்தால் Recruitment to the post of Multi Tasking (Non-Technical) Staff in Different States and Union Territories 2016 –14.05.2017 அன்று முற்பகல் மற்றும் பிற்பகல் இருவேளைகளிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி நகரப்பகுதிகளில் 14.05.2017 அன்று 08 கல்வி நிலையங்களில் நடைபெற உள்ளது. மேற்படி தேர்வினை காலையில் 4032 நபர்களும் மாலை 4032 நபர்களும் எழுத உள்ளார்கள். இத்தேர்வினை கண்காணிக்க துணை வட்டாட்சியர் நிலையில் 15 கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேருந்துகளை தேர்வு மையத்திற்கு சீராக இயக்கக்கேட்டும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி நிலையங்களுக்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக துணை ஆட்சியர் நிலையில் 8 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்வு எழுதுவோர் தங்களின் தேர்வு மையங்களை கண்டறிந்து முன்கூட்டியே தேர்வு எழுத வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் தேர்வு அறையினுள் செல்போன்களை எடுத்துச்செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு மைய வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி

12.5.17